**காலி மாநகர சபை**

**காலி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான காலி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கணக்கு மீதி ரூபா 173,069,072 தொகை எனினும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானத்தில்

பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 179,681,359 ஆகும். இவ் இரண்டு கணக்குகளிடையே மீதிகள் சமப்பட வேண்டும். எனினும் ரூபா 6,612,287 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2004 திசெம்பர் மாதத்தில் சுனாமிப் பேரழிவினால் சபையின் ஆதனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக சேதங்கள்/ நட்டங்களை மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 05 வருடத்திற்கு மிகையான காலம் முதல் தொடர்ந்து முன்கொண்டுவந்து காணப்பட்ட ரூபா 6,612,287 இற்கான 4 பொறுப்புக்கள் மீதிகளை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக 2013 அக்டோபர் 03 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ளும் போது ரூபா 6,612,287 இற்கான பொறுக்கள் மீதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானத்தில் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மந்திரமார்களின் படியாகக் கிடைத்திருந்த ரூபா 1,728,000 தொகையினை மீண்டுவரும் வருமானங்கள் எனவும் ரூபா 1,535,710 தொகையினை மீண்டுவரும் செலவுகள் எனவும் நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக மந்திரிமார் படி பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் இடையே வித்தியாசமாகிய ரூபா 192,290 தொகையை மாத்திரம் செலவு மீதி ஒன்றென்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,535,710 இனாலும் மற்றும் மீண்டுவரும் வருமானம் ரூபா 1,728,000 இனாலும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் வைப்புக் கணக்குகளில் மீதி ரூபா 192,290 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது ஹீன்பெந்தல குப்பைகள் போடப்படும் காணியில் சோதனப் பசளை உர உற்பத்தி நிலைய கட்டிடத்தின் கூரை நிர்மாணிப்பதற்காக செலுத்தியிருந்த ரூபா 412,394 இனை மூலதனப் செலவுகள் எனக் காட்டப்படாமல் மீண்டுவரும் செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஆயுள்வேத இருப்பு ரூபா 169,953 வும், ஆண்டின் போது கிடைத்திருந்த ஆயுள்வேத உதவி இருப்பு ரூபா 1,108,657 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதி இருப்பு ரூபா 54,435 நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 1,108,657 இனாலும் மற்றும் செலவுகள் ரூபா 1,224,175 இனாலும் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 10,564,616 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 9,863,786 என காட்டப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 700,830 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அதற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஐ) ரூபா 4,335,732 இற்கான 05 நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

(அ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 7,881,842 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 197,039,828 தொகை எனினும் அதனோடு தொடர்புடைய துணைப்பதிவேடுகள் சமப்படுத்தப்பட்டிருக்காமையால் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதியை துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

-----------------------------------

1999 ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டு காணப்படும் ரூபா 111,553 இற்கான தொங்கல் கணக்குகளில் வரவு மீதியை மீளாய்வாண்டின் போதேனும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 பெறவேண்டிய கணக்குகள்

---------------------------------------------

05 வருடங்களை விட பழமையான முன்கொண்டுவரப்படும் ரூபா 901,968 இற்கான 04 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 425,448,474 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கை முறையான பேணப்படுகின்ற கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வுக் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மா நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 46,628,525 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 51,835,720 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வீதவரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 70,754,869 இற்கான வீதவரி, மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வாடகை

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 40,017,500 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 21,471,137 இற்கான வாடகை மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 254(அ)(1) மற்றும் (2) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10,564,616 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 16,498,390 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 காலி பஸ் தரிப்பு நிலையத்தின் கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காலி மத்திய பஸ் தரிப்பு நிலையத்தின் மேல் மாடியில் 257.6 சதுர மீற்றர் அளவினைக் கொண்ட இலக்கம் 1, 2 மற்றும் 3 கொண்ட மூன்று கடைகளை அரச நிறுவனம் ஒன்றிற்கு 2011 ஜுலை 11 திகதி முதல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் ரூபா 766,080 இற்கான நிலுவை கடை வாடகையினை அறவீடு செய்வதற்காக மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 254அ(1) மற்றும் (2) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2013 ஆண்டிற்கான திருத்திய வாடகை ஒப்பந்தம் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ஆ) காலி மத்திய பஸ் தரிப்பு நிலையத்தின் 8 ஆம் இலக்க கடைக்காக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகைத் தொகை ரூபா 540,728 ஆக காணப்பட்டதுடன் 2014 ஜுலை 31 திகதி அளவில் அது ரூபா 775,856 வரை அதிகரித்திருந்தது. இது தொடர்பாக 2014 ஆகஸ்ட் 20 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது இக் கடை நுகர்வோருக்காக திறக்கப்பட்ட நிலையில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை 6(19) இன் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த திகதி முதல் 14 நாட்களில் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அத்துடன் கடை வாடகை செலுத்தியிருந்தாலும் 30 நாட்கள் மூடியிருக்கும் நிலையில் அவ் வர்த்தக நிலையம் சபைக்குச் சொந்தமான ஒன்றென ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்த போதும் 2014 ஆகஸ்ட் 20 திகதி வரை 2 வருடங்கள் 10 மாதங்கள் கடந்திருந்த போதும் வியாபார நடவடிக்கை ஆரம்பிக்கப்படாத கடை ஒன்றென சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) நகர ஆணையாளரினால் 2012 திசெம்பர் 10 திகதி இக் கடையில் வாடகை உரிமையை முடிவாக்கும் அறிவித்தல் அனுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதால் அறிவித்திருந்த போதும் அத் திகதி முதல் 20014 ஆகஸ்ட் மாதம் வரை 01 வருடம் 8 மாதங்கள் கழிந்திருந்த போதும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(உ) காலி மத்திய பஸ் தரிப்பு நிலையத்தின் மேல் மாடியில் 79 சதுர மீற்றர்கள் கொண்ட 20 ஆம் இலக்க கடையை போக்குவரத்து சபைக்காக ரூபா 43,000 மாதாந்த வாடகையில் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஜூலை 11 திகதி முதல் 2014 ஆகஸ்ட் 22 திகதி வரை 03 வருட காலப்பகுதி இலங்கை போக்குவரத்துச் சபை அலுவலகம் அங்கு செயற்பட்டிருந்தது. எனினும் வாடகை ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 ஜூலை 31 திதகியில் உள்ளவாறு 03 வருடங்களுக்காக நிலுவை வாடகை ரூபா 1,690,160 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் இக் கடையினை சபைக்கு உரித்தாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஊ) மேல் மாடியிலுள்ள 08 கடைகள் மற்றும் கீழ் மாடியில் 03 கடைகளில் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டுள்ள வாடகையாளர்கள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இடை வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சட்டரீதியற்ற முறையில் கடைகளை இடை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 2013 முதல் 2014 ஜூலை மாதம் வரை காலப்பகுதிக்காக ரூபா 2,841,800 இற்கான வாடகை வருமானம் ஒன்றினை சபை இழக்க நேரிட்டுள்ளது. அதே போல் உடன்படிக்கையின் 05(2) நிபந்தனையின் பிரகாரம் இடை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) மேல் மாடியில் 17 ஆம் இலக்க கடை சிற்றுண்டிச் சாலை ஒன்றிற்காக ஒதுக்கியிருந்ததுடன் அங்கு சுத்தமற்ற நீர் வடிந்து செல்வதற்கான வழி தடைப்பட்டிருந்ததன் காரணமாக நீர் ஒன்று சேர்ந்த நிலையில் காணப்பட்டது. இது பஸ் தரிப்பு நிலைய கடைகளுக்கு பொறுப்பான அலுவலர் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மழை காலங்களில் இக் கடைகளில் இரு மருங்கிலும் காணப்படும் கண்ணாடிகளின் மூலம் நீர் ஒழுதுவதன் காரணமாக வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இயலாத நிலைமை ஒன்றிற்கு அவ் வளவில் நீர் சேரும் நிலைமை காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் 2013 ஆண்டிற்காக

நகர பிதா உட்பட மந்திரமார் 16 பேர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

வருமானங்கள் சேகரிக்கும் போது கிடைத்திருந்த ரூபா 681,736 இற்கான 20 காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் காணப்பட்டதுடன் அவை தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 189 மற்றும் 486 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் ரூபா 55,473 இற்கான இனங்காணப்படாத மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக அவற்றைத் தேடி தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.3 காலி விளையாட்டு மைதானம், இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு கொடுத்தல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

சபைக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் சர்வதேச கிரிகெட் விளையாடடு மைதானம் ஒன்றாக பயன்படுத்துவதற்காக இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்கு குத்தகைக் காலம் பத்து ஆண்டுகளை கொண்ட 03 குத்தகை காலத்திற்காக குத்தகைக்கு கொடுப்பதற்காக 1998 திசெம்பர் 31 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1998 ஏப்ரல் 20 திகதி முதல் 2008 ஏப்ரல் 19 வரையான ஆண்டொன்றிற்காக ரூபா 300,000 வீதம் பத்து வருடங்களுக்கான குத்தகை ரூபா 3,000,000 ஆகும். உடன்படிக்கையின் 03 ஆவது நிபந்தனையின் பிரகாரம் வருடத்திற்கான குத்தகை ரூபா மூன்று இலட்சம் எனினும், இந்த குத்தகை உடன்படிக்கை கையொப்பமிட்ட பின்னர் அரசாங்க பெறுமதி மதிப்பீட்டாளரினால் குத்தகைக்கு வழங்கிய ஆதனத்தின் வருடாந்த பெறுமதி மதிப்பீடு மூன்று இலட்சத்தை விட கூடுதலான பெறுமதி மதிப்பீடு செய்யுமிடத்து மாத்திரம் அவ்வாறு மூன்று இலட்சத்தை மிகைக்கும் மீதித் தொகை மொத்த குத்தகைக் காலமாகிய பத்து வருடங்களுக்கு கணித்து செலுத்த வேண்டும் என குத்தகைக்கு வழங்கிய தரப்பினர் குத்தகைக்கு பெறும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும், அவ் அறிவித்தல் கிடைத்த நாள் முதல் 30 நாட்களுக்குள் குத்தகைக்கு பெற்றிருக்கும் தரப்பினர் அக் குறிப்பிட்ட முழுத்தொகையும் குத்தகையின் பகுதி ஒன்று கணித்து குத்தகைக்கு வழங்கிய தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டும் எனவும், இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். 1998 ஏப்ரல் முதல் 2003 ஏப்ரல் வரை வருடாந்த குத்தகை ரூபா 650,000 தொகையும், 2003 ஏப்ரல் முதல் 2008 ஏப்ரல் வரை வருடாந்த குத்தகை ரூபா 800,000 வும், 2008 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரை வருடாந்த குத்தகை ரூபா 1,200,000 தொகை என அரசாங்க பெறுமதி மதிப்பீட்டாளரினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 ஏப்ரல் மாதம் முதல் 2014 செப்டம்பர் மாதம் வரை குத்தகை பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் நிபந்தனைகள் 09 மற்றும் 10 இன் பிரகாரம் குத்தகைக்கு பெற்றிருந்த ஆதனங்கள் அபிவிருத்தி விடயங்களுக்கு தொடர்புடைய வேறு ஏதேனும் செயற்பாடு அல்லது செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுப்பதற்கும், மேற்குறிப்பிட்ட தீர்மானங்களை அமுல் நடவத்துவதற்காகவும் 13 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று உடன்படிக்கை கையொப்பமிட்டுள்ள திகதி முதல் இரண்டு மாத காலப்பகுதியில் குத்தகைக்கு பெற்றுள்ள தரப்பினரால் அமைக்கப்பட வேண்டும் எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2014 செப்டம்பர் 15 திகதி வரையும் அவ்வாறான குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வங்கி ஒன்றில் குழுவின் பேரில் வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும் கணக்காய்வுத் திகதி வரை அத் தேவையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடன்படிக்கையின் நிபந்தனை 17 இன் பிரகாரம் குத்தகைக்கு பெற்ற தரப்பினால் ஆதனத்தில் நிர்மாணிக்கப்படும் அனைத்து நிர்மாண வேலைகளுக்காகவும் குத்தகைக்கு வழங்கிய தரப்பினரின் பூர்வாங்க அங்கீகாரத்தினை பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாண வேலைகள் தொடர்பாக அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(உ) உடன்படிக்யையின் நிபந்தனை 19 இன் பிரகாரம் குத்தகைக்கு பெற்றுள்ள தரப்பினர் குத்தகைக்கு பெற்றுள்ள ஆதனத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாண வேலைகளும் மற்றும் அல்லது கட்டிடங்கள் அனைத்து விடயங்களும் மற்றும் சேதங்களை அணவல் செய்யும் விதமாக காப்புறுதி செய்வதாக குத்தகைக்கு பெறும் தரப்பினர் இணங்கி இருந்த போதிலும் காப்புறுதி ஏதும் மேற்கொள்ளப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உடன்படிக்கையின் 26 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் முதலாவதாக குத்தகைக் காலம் முடிவடையும் போது மீதியாக உள்ள காலப்பகுதியை நீடிப்பதற்காக குத்தகைக்கு பெற்றுள்ள தரப்பினருக்கு தேவை ஏற்படும் போது இரு தரப்பினரினதும் இணக்கத்துடன் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட வேண்டும். எனினும், இரண்டாவது 10 ஆண்டு காலப்பகுதிக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) உடன்படிக்கையின் 25 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் ஏதேனும் காரணத்தினால் ஆரம்ப குத்தகை உடன்படிக்கை முடிவடையும் 2008 ஏப்ரல் மாதம் 19 திகதியின் பின்னர் குத்தகைக்கு பெற்றிருந்த தரப்பினரினால் குத்தகைக்கு பெற்றிருந்த ஆதனத்தினை அனுபவிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கிய தரப்பினருக்கு ஒப்படைக்காமல் அவ் ஆதனத்தில் தங்கியிருந்தால் ஒரு நாளைக்கு ரூபா ஐயாயிரம் வீதம் நட்டம் ஒன்றினை குத்தகைக்கு பெற்றிருந்த தரப்பினரினால் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2008 ஏப்ரல் முதல் 2010 திசெம்பர் வரை தங்கியிருந்த காலத்திற்காக ரூபா 5,521,600 தொகையொன்று அறவிடப்பட வேண்டும். எனினும், 2011 ஜூன் மாதத்தில் நடைபெற்ற நிலையான குழுக் கூட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் இந்த தொகையினை பதிவழிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபைக்கு ரூபா 5,521,600 இற்கான நட்டமொன்று ஏற்பட்டுள்ளது. அத்துடன் 2010 திசெம்பர் முதல் 2014 செப்டம்பர் வரை குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடாமல் தங்கியிருந்த காலப்பகுதிக்கான அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,576,800 தொகையினையும் அறவீடு செய்திருக்கவில்லை.

3.4 கருத்து முரண்பாட்டுக்கு ஏதுவான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

தென் மாகாண, மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் 2007 இன் கீழ் 10 மில்லியன் ஏற்பாடுகளின் கீழ் தடல்ல இரட்டை எரிப்பு அறைகளை கொண்ட தகனசாலை நிர்மாணிப்பதற்காக 2011 திசெம்பர் 01 திகதி வரை ரூபா 7,498,654 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் எரிப்பு அறைகள் இரண்டு வழங்கி பொருத்துவதற்காக 2014 ஆகஸ்ட் 25 திகதி வரை ரூபா 4,573,600 தொகையும் மொத்தமாக ரூபா 12,072,254 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2007 நவம்பர் 21 திகதி செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் தகனசாலை நிர்மாணிப்பதற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்தததுடன் இரண்டு ஒப்பந்தக்காரர் மாத்திரம் கேள்விகள் சமர்ப்பித்திருந்தனர். கேள்விப்பத்திரங்கள் தொழில் நுட்ப குழு ஒன்றினது மதிப்பீட்டுக்கு ஆளாக்காமல், குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டு நிர்மாண வேலையை 06 மாதங்களின் பூர்த்தி செய்வதற்காக 2007 திசெம்பர் 10 திகதி ரூபா 8,566,250 இற்காக உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. பூர்த்தி செய்திருந்த வேலைகளுக்காக ரூபா 6,669,984 தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கட்டிடத்தின் நிர்மாண வேலை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதன் பின்னர் சபையினால் கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் 2011 அக்டோபர் 03 மீண்டும் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு கட்டிடத்தை மாத்திரம் நிர்மாணிப்பதற்காக ரூபா 828,670 தொகையொன்று சங்கத்திற்கு செலுத்தியிருந்தது.

(ஆ) சபையின் நகர பொறியியலாரின் வேண்டுகோளின் பிரகாரம் 2008 நவம்பர் 07 திகதி மற்றும் 2010 ஜுன் 09 ஆகிய திகதிகளில் இரட்டை எரிப்பு அறைகள் நிர்மாணிப்பதற்காக இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் மதிப்பீடுகளை வழங்கியுள்ளது. அந் நிறுவனம் வேலையை ஆரம்பிக்க முன்னர் 50% இற்கான முற்பணம் ஒன்றினை வழங்குமாறு கேட்டிருந்த போதும் அத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீண்டும் கேள்வி கோருவதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ) தகனசாலைக்கு எரிப்பு அறைகள் இரண்டு வழங்கி பொருத்துவதற்காக 2010 செப்டம்பர் 27 திகதி மற்றும் 2012 ஜுன் 15 திகதி செய்தித்தாள் அறிவித்தல் வெளியிட்டு கிடைத்திருந்த கேள்விகளை தொழில் தகைமைகள் மற்றும் சிறந்த அனுபவமுடைய ஐந்து அலுவலர்களை கொண்ட தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் மூலம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இரண்டு சந்தர்ப்பங்களிலும் குழுவினால் வழங்கப்பட்டிருந்த விதப்புரைகளை சபை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துள்ளது.

(ஈ) 2012 ஆகஸ்ட் 09 திகதி சபை தீர்மானத்தின் பிரகாரம் 2012 நவம்பர் 01 திகதி நான்காவது தடவையும் செய்தித்தாள்களில் கேள்வி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், முதலாவது நிறுவனத்தினால் ரூபா 9,288,647 மற்றும் இரண்டாவது நிறுவனத்தினால் ரூபா 8,999,515 ஆக 02 கூறுவிலைகள் கிடைத்திருந்தன. கிடைத்திருந்த கேள்விப் பத்திரங்கள் மதிப்பீடு செய்வதற்காக சபையினால் மீண்டும் ஒரு முறை தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் குழு அறிக்கையின் விதப்புரையின் பிரகாரம் முதலாவது நிறுவனத்திற்கு கேள்வியினை வழங்குவது சிறந்தது என விதந்துரைக்கப்பட்டது. அதே போல் கேள்வி சமர்ப்பித்திருந்த இருவரும் நிர்மாண வேலையின் கட்டாய நியமக் குறிப்பீடு ஆகிய கடலின் பகுதிக்கு மிகவும் தாக்கிப்பிடிக்கக் கூடியதாக நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படும் பண்டங்கள் பற்றிய திருப்தி அடைய முடியாமையால் தகனசாலை நிர்மாண வேலையில் அனுபவமுள்ள இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் மேற்கொள்வது சிறந்தது என விதந்துரைக்கப்பட்டது. அவ்வாறாயினும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் விதப்புரையை மறுத்து 2012 திசெம்பர் 24 திகதி நடைபெற்ற விஷேட பொதுக் கூட்டத்தில் இரண்டாவது நிறுவனத்திற்கு இந்த கேள்வியினை வழங்கி ரூபா 8,999,515 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்தக்காரரினால் 2013 ஜுலை 10 திகதி சமர்ப்பித்திருந்த ரூபா 2,613,915 இற்கான முதலாவது பில் பத்திரத்திற்காக நகர பொறியியலாரின் விதப்புரையும் மற்றும் நகர

ஆணையாளரின் அங்கீகாரமும் இன்றி பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 1,000,000 தொகையொன்று 2013 ஆகஸ்ட் 26 திகதி செலுத்தப்பட்டிருந்தது. 2014 ஏப்ரல் 07 திகதி ரூபா 8,035,281 இற்கான இறுதி பில்பத்திரத்திலுள்ள நகர பொறியியலாளரின் விதப்புரையும் மற்றும் நகர ஆணையாரின் அங்கீகாரமும் இன்றி பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு 2014 ஜுன் 20 திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3,573,600 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கணக்காய்வுத் திகதியாகிய 2014 ஆகஸ்ட் 25 திகதி வரை இந்த நிர்மாண வேலைக்கான செய்தித்தாள் அறிவித்தல் கட்டணம், ஊசாத்துணைக் கட்டணம் மற்றும் மதிப்பீட்டுக் குழு படியாக ரூபா 220,019 செலுத்தியிருந்ததுடன் தகனசாலை நிர்மாணிப்பதற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து பெறவேண்டிய அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை.

(எ) தகனசாலை 2014 ஜுன் 24 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்தது. அத்துடன் அலகு எரிப்பு அறை ஒன்று 2014 ஆகஸ்ட் 10 திகதி முதல் மற்றும் அடுத்த எரிப்பு அறை 2014 ஆகஸ்ட் 10 திகதியில் இருந்து செயற்படாமல் காணப்பட்டது.

(ஏ) தகனசாலை நிர்மாண வேலைகள் உரிய நியமங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் பாரிய குறைபாடுகள் உடன் காணப்பட்டது எனவும் 2014 ஆகஸ்ட் 25 திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை திருத்த வேலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என மேலும் அதவானிக்கப்பட்டது.

3.5 செயற்படாத சொத்துக்கள்

------------------------------------------

2007 ஆண்டின் போது கனடா அமைப்பு ஒன்றில் இருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த எக்ஸ்கவேடர் இந்திரம் 2009 பெப்ரவரி மாதத்தின் பின்னர் ஓடியிருக்கவில்லை. எனினும் திருத்த வேலைகளுக்காக 2010 பெப்பரவரி மாதம் முதல் 2014 ஆகஸ்ட் வரை ரூபா 541,956 தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ் இயந்திரம் கழிவுப் பொருட்கள் குவிக்கப்படும் காணி ஒன்றில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதென 2014 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.6 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2011 மே 31 திகதிய இலக்கம் தபபா/இ/01/சுற்றுநிருபம்2/2011 கொண்ட சுற்று நிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் பாதைக்கு போடப்படும் கொங்கிரீட் கலவைகளில் கொங்கிரீட் கியூப் பெறப்பட்டு தரம் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பி தரம் தொடர்பாக பொறியியலாரின் விதப்புரையுடன் தரப் பரிசோதனை அறிக்கை பெறப்பட வேண்டியிருந்தது. எனினும் அவ்வாறான அறிக்கைகள் மற்றும் விதப்புரைகள் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டுள்ள 47 நிர்மாண வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 16,547,224 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்